


ராஜேந்திரன் பிக்சர்ஸ்

# அல்லி

## நடிகர்கள்:

| | | |
|---|---|---|
| எஸ். எஸ். ராஜேந்திரன் | — | கண்ணன |
| சஹஸ்ரநாமம் | ... | சோமு |
| அசோகன் | ... | பக்கிரி |
| ராஜன | ... | பாபு |
| நாகேஷ் | ... | கத்திரி |
| டி. வி. நாராயணசாமி | ... | எஸ். பி. |

## நடிகைகள்:

| | | |
|---|---|---|
| ஆர். விஜயகுமாரி | ... | மைனு |
| சௌகார் ஜானகி | ... | அல்லி |
| புஷ்பலதா | ... | சாந்தி |
| பேபி பத்மினி | ... | உமா |
| புஷ்பவல்லி | ... | தாயார் |
| புஷ்பமாலா | ... | ரஞ்சிதம் |
| மீனுகுமாரி | ... | மீனு |
| கீதாஞ்சலி | ... | நடனம் |

முத்துராமலிங்கம், கே. நடராஜன், டி. என். கிருஷ்ணன், எஸ். ஏ. ஜி. சாமி, செந்தாமரை தண்டபாணி, என். ஆர். ராமலிங்கம், என். எஸ். மணி, நாராயணன், பைரவ சுந்தரம், சண்முகம், பெருமாள், கே. டி. ராஜ கோபால்: இந்திரா, ஜெயந்தி, நளினு, பாலா, சுசிலா, ராஜேஸ்வரி, தேவகி.

மற்றும் பலர்.

கதை-வசனம்: நாகர்கோவில் கே. பத்மநாபன்

பாடல்கள்: கண்ணதாசன்-ஆலங்குடி சோமு-பஞ்சு அருணாசலம்.

இசை: கே. வி. மஹாதேவன்

பின்னணிப் பாடியவர்கள்:

டி. எம். சௌந்தரராஜன், பொன்னுசாமி, சுசிலா, ஜமுனாராணி, எஸ். ஜானகி.

ஒளிப்பதிவு: சுந்தரபாபு

ஒலிப்பதிவு: கோடீஸ்வர ராவ்

எடிட்டிங்: ஆர். தேவராசன்

சண்டைப் பயிற்சி: சியாம் சுந்தர்

தயாரிப்பு நிர்வாகம்: பி. எஸ். தட்சனாமூர்த்தி

டைரக்ஷன்: எஸ். எஸ். ஆர்.

ஸ்டுடியோ: ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

கலைமகள், மதுரை.

## கதைச் சுருக்கம்

உலகம் உறங்கிக் கொண்டிருக்கும்; அவர்கள் விழித்திருக்க வேண்டியிருக்கும்.

அமைதியாக மாறவர்கள் வாழ்க்கை இயங்கிக் கொண்டிருக்கும்; அந்த...

அமைதி கெடாமலிருக்க அவர்கள் ஓயாமல் போராட வேண்டியிருக்கும்.

மனைவி- மக்களோடு மற்றவர்கள் களித்திருப்பார்கள்.

எங்கோ ஒரு மூலையிலே அவர்கள் தனித்திருப்பார்கள்,

இரவும் பகலும், என்றும், எடபோதும் ஒரே லட்சியம்! ஒரே குறிக்கோள்!

நீதி நிலைக்கவேண்டும்.

சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும்.

விருப்பு, வெறுப்பு, ஆசை, பாசம் எதுவுமே அவர்கள் பாதையில் குறுக்கிட முடியாது

தன்னலமற்ற இந்தத் 'தனி மனித' க் கூட்டத்திலே— போலீஸ் வீரர்களிலே— ஒருவன்தான் கண்ணன். அவன் கதையை "அல்லி" உங்களுக்கு கூறுவாள்.

—:—

# அல்லி பாடல்கள்

## பாட்டு 1

இயற்: கண்ணதாசன் பாடி: சௌந்தரராஜன்-சுசிலா

தொகையரு

ஆண்: காவேரி மீனடியோ காட்டுக்குள்ளே மானடியோ
கூவாத குயிலடியோ கொல்லி மலைத் தேனடியோ
ஹும்மிங் இந்தாப் புள்ளே
ஏ புள்ளே ஏ புள்ளே எங்கே போறே—நீ
எந்த ஊரு மாப்பிள்ளையை பாக்கப்போறே
ஏ புள்ளே ஏ புள்ளே

பெண்: ஏ மச்சான் ஏ மச்சான் எங்கே வாரே—நீ
என்ன வார்த்தை பேசிக்கிட்டு இங்கே வாரே
ஏ மச்சான் ஏ மச்சான் ஏ மச்சான்

ஆண்: ஆம்பளேபோல் நடக்கிறே—ஆடுபோல முழிக்கிறே
ஆசையாகப் பேசவந்தாக் கொதிக்கிறே

பெண்: பொம்பளைங்க தெருவிலே போகக்கூட முடியலே
ஆம்பளேபோல் நடக்கலேன்னு
அன்புத் தொல்லை தாங்கலே தாங்கலே

ஆண்: உருவம் நல்ல உருவம்தான் பருவம் நல்ல பருவந்தான்
ஒருத்தன் கையில் நீ கெடச்சா கரும்புத்தான்

பெண்: இனிப்பு மிக்க கரும்பிலே உனக்கும்கூட கண்ணுதான்
இன்னும் கொஞ்சம் ோகப்பாத்து
நானும்கூட விரும்பலாம் விரும்பலாம்

ஆண்: மலையைத்தேடி போவமா மான்கள்போல ஆவமா
மாலை ஒண்ணு மாத்திக்கிட்டு வாழ்வமா

பெண்: கேட்டவுடன் கிடைக்குமா போட்டவுடன் முளைக்குமா
தடையில்லாத காதலிலே சந்தோஷம்தான்
இருக்குமா இருக்குமா

ஆண்: ஆசையோடு பாக்கிறேன் அவசரமா கேக்கிறேன்
ஆசட்டுன்னு சொன்னபோதும் காத்துக் கெடக்கிறேன்
இந்த எண்ணம் வளரட்டும் இன்னும் கொஞ்சம் மலரட்டும்
இந்தக் கண்ணு இந்தப்பொண்ணை அள்ளி
அள்ளிப் பருகட்டும் பருகட்டும் [ஏ]

பாட்டு 2

இயற்: ஆலங்குடி சோமு பாடி: பொன்னுச்சாமி-ஜமுனாராணி
அந்தி மலர் பூத்திருக்கு
ஆசை மனம் காத்திருக்கு
முந்திவிடும் முன்னாலே ஓடிவா
முந்திவிடும் முன்னாலே ஓடிவா (அந்தி

ஆண்: கோபுரவாசல் மடியினிலே மடியினிலே-இளங்
குமரி உன்னைப் பார்க்கிறேன் பாக்க்கிறேன்
பெண்: நீ கொடுக்கப்போகும் வாழ்வை எண்ணி
வாழ்வை எண்ணி
நான் கண்மயங்கித் தவிக்கிறேன் தவிக்கிறேன் [அந்தி)
ஆண்: ஆடும்விழிகள் திரும்பட்டும் அழகுத்தேனை அருந்தட்டும்
பாடும் நாணம் விலசட்டும் பருவக்கோலம் பழகட்டும்
பெண்: அன்புஎன்னை ஆளட்டும் அமைதி அங்குவாழட்டும்
இன்பமேகம் பொழியட்டும் இதயபூமிகுழிரட்டும் (அந்தி

ஆண்: குங்கும இதழ்கள் மலரட்டும் மலரட்டும்
கொஞ்சிடும் புன்னகை தவழட்டும் தவழட்டும்
பெண்: மங்கள இசைகள் முழங்கட்டும்-எனக்கு
மனவிப் பெருமை வழங்கட்டும் வழங்கட்டும் [அந்தி]

பாட்டு 3

இயற்: எம். கே. ஆத்மநாதன் பாடியவர்: பி. சுசிலா
கன்னிப்பெண்ணைக் கைப்பிடித்து
காதலித்து மணமுடித்து
வந்திருக்கும் மன்னவரே வாங்க—உம்மை
வரவேற்க காத்திருந்தோம் நாங்க
தேனிலவை அனுபவிக்க இங்கு வந்தீரோ-உங்கள்
சிந்தனைக்கு ஓய்வுதர எண்ணுகின்றீரா

தேவையென்றால் இன்பம்வரும் தெரிந்து
கொண்டீரா—எல்லாம்
தெரிந்தவரோ பக்குவமாக நடந்துகொள்வீரா-கன்னி
நீலமயில் ஆடுவது உங்களுக்காக—உங்கள்
நேரில்வந்து நல்வாவு சொல்வதற்காக
மாலையிட்ட புதியவளும் மகிழ்வதற்காக—அந்த
மகிழ்ச்சியிலே நானும் பங்குபெறுவதற்காக

பாட்டு 4

இயற்: பஞ்சு அருணசலம் பாடியவர்: பி. சுசிலா

என்னங்க என்னைத் தெரியுமா
இங்கேதான் உங்கள் கவனமா
ஏதேனும் சொன்னல் புரியுமா
சொல்லலாமா [என்னங்க]

கண்ணில் மின்னலைக் கண்டேன்
என்னிலை மயங்கி நின்றேன்
கால்களோ முன்னும் பின்னும்
தள்ளாடித் தள்ளாடி நடக்கக்கண்டேன்
காரணம் என்னங்க சொல்லுங்க (என்னங்க)

பாலிலே குளித்து வந்தேன்
பனியில் நனைந்து வந்தேன்
நூலிலே ஆடும் பெண்மை
மலரும் மென்மை—எடுத்துவந்தேன்
இன்னும் சொல்லணுங்க
வெட்கமா இருக்குதுங்க [என்னங்க

இருட்டில் விளக்கு ஒன்று
சிரிப்பது யாரைக்கண்டு
எதிரில் இன்பம் இருந்தும்
தன்னை—மறந்து உங்களைக்கண்டு
ஒரு பொண்ணு—இன்னும்
எப்படிச் சொல்லுவாங்க [என்னங்க

பாட்டு 5

இயற்: கண்ணதாசன் பாடியவர்: பி. சுசிலா

உன்னையன்றி யாரிடம் என்
நிலையைச் சொல்வேன்—இந்த

உறவிலுள்ள ரகசியத்தை
எவரிடம் சொல்வேன் [உன்னை]
குலமகளென்றுலகமென்னைப் போற்றுகின்றதே-நல்ல
குணம்படைத்த அன்னையென்று வாழ்த்து கின்றதேன்
இதயம் மட்டும் ஒன்றேயெண்ணி வாடுகின்றதே-அது
இலைமறைந்த காயைப்போல வாழுகின்றதே [உன்னை]

காலம் ஒன்று தோன்றும்போது உண்மையைச்
சொல்வேன்—என்
கருத்தினிலே உன்னைப்பதித்த காரணம் சொல்வேன்
கருணையோடும் உரிமையோடும் அணைத்துக்
கொள்ளுவேன்—என்
கண்ணிரண்டில் உன்வடிவை எடுத்துக்
கொள்ளுவேன் [உன்னை]

பாட்டு 6

இயற்: பஞ்சு அருணாசலம் பாடியவர்: எஸ். ஜானகி

நலுங்கு பாடவா பாடவா பாடவா-பொன்விலங்கு
சூடப்போகும் நேரத்திலே ஆடவா [நலுங்கு]

மாளிகையின் வாசலையே திறந்து வைப்பாங்க-பூ
மாலைபோட்டு வரவேற்க காத்திருப்பாங்க
வணக்கம் சொல்வாங்க விருந்து வைப்பாங்க
வாரம் மாதம் வருஷம் பார்த்து
வாழ்த்திடுவாங்க [நலுங்கு]

பாசமென்ற கூட்டுக்குள்ளே பூட்டிவைப்பாங்க
படமெடுத்துப் பேரெழுதி மாட்டிவைப்பாங்க
காவல் நிப்பாங்க கடமை செய்வாங்க
காலை மாலை நேரம்பார்த்து காத்திருப்பாங்க (நலுங்கு]

சீர் சுமந்து மாமன் இங்கே வருகிறான்
செல்வமகள் உனது கையைத் தொடுகிறாள்
உற்றவரே நெருங்குது கெட்டிமேளம் முழங்குது
உனது வாழ்வில் புதிய பாடம் தொடங்குது.

வணக்கம்